**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14–ஆம் தேதி (14.12.2018) வெள்ளிக் கிழமை காலை 10.15 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.**

1. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்.938/2 பகுதி , 4 பகுதி - இல் 75568.75 ச.அடி பரப்பளவு இடத்தில் கலைமகள் நகர்-3 என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரரின் இணையதள விண்ணப்ப எண். DTCP/L/0148886/2017 நாள்.27.04.2018- ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 63/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண் 7804/2018 நாள்.11.12.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 4940/18/இ1

**178. அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்.948/2Bபார்ட் (பழைய ச.எண்.882/B2) -இல் 37243.80 ச.அடி பரப்பளவு பாலாஜி கார்டன் - II என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு , வரன்முறை வேண்டி மனுதாரரின் விண்ணப்ப நாள்.14.12.2017-ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 41/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.7576/2018 நாள்.30.11.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 5338/18/இ1

**179. அனுமதிக்கப்பட்டது.**

**3.** மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கு அரசாணை (எம்.எஸ்) எண். **73**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். **19.07.2018** மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண். **76**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். **26.07.2018–ல் 01.04.2018** முதல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் **01.04.2018** முதல் சொத்துவரி பொதுச் சீராய்வு (Quinquennial Revision) செய்வது குறித்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **20.08.2018** மற்றும் **21.08.2018–ம்** தேதிய சுற்றறிக்கை, கடிதம் ந.க.எண். **20555/2018**/ஆர்**1–ல்** தெரிவித்துள்ள அறிவுரைகளின்படியும் மண்டலம் மற்றும் மண்டல மதிப்பு (Zonal value) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். **126**, நாள். **05.09.2018–ல்** அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி விடுப்பட்டுள்ள ஐந்து வீதிகளுக்கு கீழ்க்கண்டவாறு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வீதியின் பெயர் | ஏற்கனவே உள்ள மண்டலம் (Old zone) | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு (Old zonal value) | புதிய மண்டலம் (New zone) | புதிய மண்டல மதிப்பு (New zonal value) |
|---|---|---|---|---|---|---|
| **1.** | **36** | பெருந்துறை சாலை (ராணா லட்சுமணன் நகர்) [Perundurai Road (Rana Lakshmanan Nagar)] | ERODE-ZONE-B | **2.10** | ERODE-ZONE-B | **2.20** |
| **2.** | **36** | ராணா லட்சுமணன் நகர் [Rana Lakshmanan Nagar] | ERODE-ZONE-B | **2.10** | ERODE-ZONE-B | **2.20** |
| **3.** | **34** | முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் பகுதி–**6** [Muthampalayam Housing Unit-PH-VI ] | ERODE-ZONE-C | **1.60** | ERODE-ZONE-C | **1.70** |
| **4.** | **34** | முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் பகுதி–**7** [Muthampalayam Housing Unit-PH-VII ] | ERODE-ZONE-C | **1.60** | ERODE-ZONE-C | **1.70** |
| **5.** | **34** | முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் பகுதி–**8** [Muthampalayam Housing Unit-PH-VIII ] | ERODE-ZONE-C | **1.60** | ERODE-ZONE-C | **1.70** |

அலுவலகக் குறிப்பு :–

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ1/3935/2018

**180.** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4. ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், ரீ.ச.எண். 19/4, க.ச.185 நெ.பு.ஹெ.082.5.க்கு த.ரூ.2.79 இதன் பட்டா எண். 347 இதற்கு பு.ஏ.2.0386 விஸ்தீரண பூமியில் ரோட்டை நேர் செய்வதற்காக பரிவர்த்தனை செய்து கொண்ட பு.ஹெ.0.05.73 இதற்கு பு.ஏ. 0.1417 நீங்கலாக மீதமுள்ள பு.ஏ.1.8969 விஸ்தீரண பூமியையும், பின்னும்,

மேற்படி கிராமம், ரீ.ச.எண். 19/2 Part, 19/3Part,19/7Part இதில் எனக்குப் பரிவர்த்தனைப் பத்திரப்படி பாத்தியப்பட்ட பு.ஏ.0.1417 விஸ்தீரண பூமியையும் சேர்த்து

ஆக கூடும் பு.ஏ. 2.0386 விஸ்தீரண பூமியில் ரோடுகள் ஏற்படுத்தி மனைநிலங்களாகப் பிரிவினை செய்து "ஜெம் சிட்டி" எனப் பெயர் வைத்து விற்பனை செய்து வருவதில், உள்ளதும், நான் நாளது தேதியில் ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக வழங்கும் ரோடுகள், பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடம் வகையராக்களுக்குச் செக்குப்பந்தி :-

ஒண்டிக்காரன்பாளையம் சாலைக்கும் –தெற்கு, வீட்டுமனை எண்கள். 5,6,7–க்கும், அடியிற் கண்ட இனம் 2–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டு மனை எண்கள் 18,19–க்கும், அடியிற் கண்ட இனம் 3–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டுமனை எண். 30 , 31 –க்கும், அடியிற்கண்ட இனம்–4ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டுமனை எண். 41W-க்கும் –மேற்கு, ரீ.ச.19/7 பார்ட் –க்கும் – வடக்கு, நிலையிலுள்ள 15 அடி அகல தென்வடல் நீள சாலைக்கும் – கிழக்கு. இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 15 அடிகளும், தென்புறம் 15 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 421'3" அடிகளும், மேல்புறம் 421'3" அடிகளும், இந்தவகை அளவுள்ள 6319–1/2 சதுரடிகள் கொண்ட 15 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும்,

இது இனம் –1, பின்னும்,

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் –கிழக்கு, வீட்டுமனை எண். 7 முதல் 12க்கும் – தெற்கு, மூலை முடக்கு இடத்துக்கும் – மேற்கு, வீட்டுமனை எண்கள். 13 முதல் 18–க்கும் – வடக்கு. இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 190 அடிகளும், தென்புறம் 190 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 25 அடிகளும், மேல்புறம் 25 அடிகளும், இந்தவகை அளவுள்ள 4750 சதுரடிகள் கொண்ட 25 அடி அகல கிழமேல் நீள ரோடு பூராவும்,

இது இனம் –2, பின்னும்,

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் –கிழக்கு, வீட்டுமனை எண். 19 முதல் 24க்கும் – தெற்கு, மூலை முடக்கு இடத்துக்கும் – மேற்கு, வீட்டுமனை எண்கள். 25 முதல் 30–க்கும் – வடக்கு. இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 190 அடிகளும், தென்புறம் 194–1/2 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 25 அடிகளும், மேல்புறம் 25 அடிகளும், இந்தவகை அளவுள்ள 4806–1/4 சதுரடிகள் கொண்ட 25 அடி அகல கிழமேல் நீள ரோடு பூராவும்,

இது இனம் –3, பின்னும்,

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் –கிழக்கு, வீட்டுமனை எண். 31 முதல் 36க்கும் – தெற்கு, இன்னும் மேற்படி நிறுவனம் வசமுள்ள இடத்துக்கும் –மேற்கு, வீட்டுமனை எண்கள். 41E முதல் 37E –க்கும் –வடக்கு இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 234–3/4 அடிகளும், தென்புறம் 216–3/4 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 25 அடிகளும், மேல்புறம் 25 அடிகளும், இந்தவகை அளவுள்ள 5643–3/4 சதுரடிகள் கொண்ட 25 அடி அகல கிழமேல் நீள ரோடு பூராவும்,

இது இனம்–4, பின்னும்,

**பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டுமனை எண். 41W–க்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 4–ல் கண்ட ரோட்டுக்கும் –தெற்கு, வீட்டுமனை எண். 41E-க்கும் – மேற்கு, ரீ.ச.19/6 நெ. காலைக்கும் – வடக்கு, மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் – கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 17 அடிகளும், தென்புறம் 17 அடிகளும், தென்வடலாக

கிழபுறம் 40 அடிகளும், மேல்புறம் 39' 6" அடிகளும், இந்தவகை அளவுள்ள 671–1/2 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடம் பூராவும்,
இது இனம்–5, பின்னும்,

**பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டுமனை எண். 35E–க்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 4–ல் கண்ட ரோட்டுக்கும் –வடக்கு, வீட்டுமனை எண். 35W-க்கும் –கிழக்கு, வீட்டுமனை எண். 25–க்கும் –தெற்கு, வீட்டுமனை எண். 36–க்கும் – மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 30 அடிகளும், தென்புறம் 30 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 35 அடிகளும், மேல்புறம் 35 அடிகளும், இந்தவகை அளவுள்ள 1050 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடம் பூராவும்,
இது இனம் –6, பின்னும்,

**பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டுமனை எண். 36–க்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 4–ல் கண்ட ரோட்டுக்கும் –வடக்கு, வீட்டுமனை எண். 35E-க்கும் –கிழக்கு, ரீ.ச.19/5–க்கும் – தெற்கு, இன்னும் மேற்படி நிறுவனம் வசமுள்ள இடத்துக்கும் –மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 23'8" அடிகளும், தென்புறம் 19 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 42'3" அடிகளும், மேல்புறம் 42 அடிகளும், இந்தவகை அளவுள்ள 892–1/2 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடம் பூராவும்,
இது இனம் –7, பின்னும்,
ஒண்டிக்காரன்பாளையம் சாலைக்கும்– தெற்கு, ரீ.ச 19/5 நெ. காலைக்கும் –மேற்கு, மேலே இனம் 3–ல் கண்ட ரோட்டுக்கும், –வடக்கு, மேலே இனம் –3ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள் 24, 13–க்கும், மேலே இனம் 2–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டு மனை எண்கள் 12,1–க்கும் , –கிழக்கு,

இதன் மத்தியில் கிழமேலாக இருபுறமும் தலா 2 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 255 அடிகளும், மேல்புறம் 230 அடிகளும், இந்த வகை அளவுள்ள 485 சதுரடிகள் கொண்ட மூலை முடக்கு பூராவும்,
இது இனம்–8, ஆக இனம் 1 முதல் 8க்கும் கூடும் 24618–1/2 சதுரடிகள் (2287.11 சதுர மீட்டர்கள்) கொண்ட உள்ள ரோடுகள், பூங்கா ஒதுக்கப்பட்ட இடம் வகையறாக்கள் பூராவும், இதற்கு சம்மந்தப்பட்ட சகல ரோடுகளையும் பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பொது பாத்தியங்கள் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்து முன்பு வில்லரசம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்கும், தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்கும் உட்பட்டது

மேற்படி பூங்கா இடமும், மனையிடங்களும் ந.க.எண். 10371 /2018, சேம–3, நாள். 09.10.2018, ம.வ.(வரன்முறை) /ம.(சே) எண். 846/2018 வரன்முறை மனைப்பிரிவு எண். 985/2018 நெம்பரில் கொள்கை அளவிலான ஒப்புதல் பெற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட பூங்கா ,சாலை மற்றும் மூலைமுடுக்கு இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 28.11.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 3705 / 2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலை, பூங்கா, மூலைமுடுக்குகள் ஆகியவற்றை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம் கோப்பு எண்.இ2/3479/2018

**181. அனுமதிக்கப்பட்டது.**

5. ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், ஈரோடு மாநகராட்சி வார்டு எண். 31 க.ச. 120 ரீ.ச.எண். 325/1 நெ. பு ஹெ. 0.04.5 க்குத் தரம் ரூ. 0.16. , க.ச.120 ரீ.சஎண், 325/2 நெ.பு.ஹெ. 0.09.0க்குத் தரம் ரூ. 0.30, ஆக கூடும் பு.ஏ.0.33 , க.ச.120,121, ரீ.ச.எண். 325/3 நெ.பு.ஹெ.2.44.0க்குத் த. ரூ 8.25 இதில் பு.ஏ. 6.03 , க.ச.118, ரீ.ச.எண். 326/7 நெ.பு.ஏ0.30.க்கு த. ரூ. 0.41 பூராவும், க.ச. 118, 119, ரீ.ச.எண்.326/8 நெ.பு.ஏ. 4.63க்கு த.ரூ. 6.34, இதில் பு. ஏ. 3.13க்கு த.ரூ. 4.29 பூராவும், க.ச.118 ரீ.ச.எண். 326/10 நெ.பு.ஏ0.25.க்கு த.ரூ. 0.34 பூராவும், இதில் பு.ஏ.2.00 ஆகக் கூடும் பு.ஏ.8.36

செண்ட் விஸ்தீரண பூமியில் ரோடுகள் ஏற்படுத்தி மனைநிலங்களாகப் பிரிவினை செய்து “ ஸ்ரீ ரூபி கார்டன்“ எனப் பெயர் வைத்து விற்பனை செய்து வருவதில் , உள்ளதும், நான் நாளது தேதியில் ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக வழங்கும் ரோடுகள், பூங்கா, கோயில், கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடம் வகையராக்ளுக்குச் செக்குப்பந்தி :-

வீட்டுமனை எண்கள். 1 முதல் 19–க்கும் – தெற்கு, இன்னும் எனது வசமுள்ள இடத்துக்கும் –கிழக்கு, வீட்டுமனை எண்கள். 20 முதல் 28–க்கும், அடியிற் கண்ட இனம் 4–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள். 29 முதல் 32–க்கும், அடியிற் கண்ட இனம் 3–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டு மனை எண்கள். 33 முதல் 36–க்கும், அடியிற்கண்ட இனம் 2–ல் கண்ட ரோட்டுக்கும், அடியிற்கண்ட இனம். 6–ல் கண்ட வீட்டுமனை எண். 37–க்கும் – வடக்கு, ரீ.ச.எண். 327 –க்கும் – மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 661 அடிகளும், தென்புறம் 681 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 30 அடிகளும், மேல்புறம் 30அடிகளும், இந்தவகை அளவுள்ள 20130 சதுரடிகள் கொண்ட 30 அடி அகல கிழமேல் நீள ரோடு பூராவும், இது இனம் –1, பின்னும்,

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 37 முதல் 49–க்கும் –மேற்கு, அடியிற்கண்ட இனம் 5–ல் கண்ட ரோட்டுக்கும் –வடக்கு, வீட்டுமனை எண்கள். 36,76 முதல் 89 –க்கும் – கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 30 அடிகளும், தென்புறம் 30 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 485 அடிகளும், மேல்புறம் 485 அடிகளும், இந்த வகை அளவுள்ள 14550 சதுரடிகள் கொண்ட் 30 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும், இது இனம் –2, பின்னும்,

மேலே இனம் –1ல் கண்ட ரோட்டுக்கும் – தெற்கு , வீட்டுமனை எண்கள். 90 முதல் 103 &33–க்கும் – மேற்கு, அடியிற்கண்ட இனம் 5–ல் கண்ட ரோட்டுக்கும் – வடக்கு, வீட்டுமனை எண்கள் . 32,104 முதல் 117–க்கும் – கிழக்கு, இதன்மத்தியில் கிழமேலாக வடபுறம் 30 அடிகளும், தென்புறம் 30 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 485 அடிகளும், மேல்புறம் 485 அடிகளும், இந்தவகை அளவுள்ள 14550 சதுரடிகள் கொண்ட 30 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும், இது இனம் –3, பின்னும்,

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 75–க்கும், வீட்டுமனை எண்கள். 118 முதல் 131, 29–க்கும் –மேற்கு, நிலையிலுள்ள சாலைக்கும் – வடக்கு, வீட்டுமனை எண்கள் . 28, 132 முதல் 148 –க்கும் –கிழக்கு. இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 30 அடிகளும், தென்புறம் 30 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 582–1/2 அடிகளும், மேல்புறம் 583–1/2 அடிகளும், இந்தவகை அளவுள்ள 17490 சதுரடிகள் கொண்ட 30 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும், இது இனம் –4, பின்னும்,

வீட்டு மனை எண்கள்.51, 50,49–க்கும், மேலே இனம் 2–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள். 89,90 –க்கும் , மேலே இனம்3–ல் கண்ட ரோட்டுக்கும், வீட்டு மனை எண்கள். 117,118 –க்கும் – தெற்குஇ மேலே இனம் –4ல் கண்ட ரோட்டுக்கும்– கிழக்கு, வீட்டுமனை எண்கள். 60 முதல் 75க்கும் – வடக்கு, இன்னும் எனது வசமுள்ள

மனைநிலத்துக்கும் –மேற்கு இதன்மத்தியில் கிழமேலாக வடபுறம் 469–3/4 அடிகளும், தென்புறம் 475 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 30 அடிகளும், மேல்புறம் 30 அடிகளும், இந்தவகை அளவுள்ள 14171–1/4 சதுரடிகள் கொண்ட 30 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும், இது இனம் –5, பின்னும்,

**வீட்டுமனை எண். 37 உள்ள பூங்கா இடத்துக்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 1ல் கண்ட ரோட்டுக்கும் –தெற்கு, ரீ.ச 327–க்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 38–க்கும் – வடக்கு, மேலே இனம் –2ல் கண்ட ரோட்டுக்கும் – கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 18 அடிகளும், தென்புறம் 30 அடிகளும் அதிலிருந்து வடக்கு நோக்கி கிராஸாக 20 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 66 அடிகளும், மேல்புறம் 65 அடிகளும், இந்தவகை அளவுள்ள 2116–1/2 சதுரடிகள் கொண்ட பூங்காகவுக்காக விடப்பட்டுள்ள மனை நிலமும், இதிலுள்ள கோயில் பூராவும், இது இனம்–6, பின்னும்,

**வீட்டுமனை எண். 97N, 98,99,100S உள்ள பூங்கா இடத்துக்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 3–ல் கண்ட ரோட்டுக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண். 100 –N-க்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 79 முதல் 82–க்கும் –மேற்கு, வீட்டு மனை எண். 97S-க்கும் – வடக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 55 அடிகளும், தென்புறம் 55 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 90 அடிகளும், மேல்புறம் 90 அடிகளும், இந்தவகை அளவுள்ள 4950 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைநிலம் பூராவும், இது இனம்–7, பின்னும்,

**வீட்டுமனை எண். 28A உள்ள பூங்கா இடத்துக்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 28 –-க்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 28 க்கும், ரீ.ச.324–க்கும் – வடக்கு, வீட்டு மனை எண். 27E-க்கும் –கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 40 அடிகளும், தென்புறம் மேல்புறத்திலிருந்து கிழக்கு நோக்கி 22–1/2 அடிகளும், அதிலிருந்து வடக்கு நோக்கி 10 அடிகளும், அதிலிருந்து கிழக்கு நோக்கி 16 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 40 அடிகளும், மேல்புறம் 49 அடிகளும், இந்தவகை அளவுள்ள 1840 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைநிலம் பூராவும், இதிலுள்ள கிணறு ஒன்று பூராவும், இது இனம்–8, பின்னும்,

**வீட்டுமனை எண். 9 உள்ள பூங்கா இடத்துக்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் –வடக்கு, வீட்டுமனை எண். 10–க்கும் –கிழக்கு, ரீ.ச.326/8 – பார்ட்–க்கும் –தெற்கு, வீட்டு மனை எண். 8–க்கும் –மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 30 அடிகளும், தென்புறம் 30 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 58–1/2 அடிகளும், மேல்புறம் 58–1/2 அடிகளும், இந்தவகை அளவுள்ள 1755 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைநிலம் பூராவும், இதிலுள்ள மேல்நிலை தொட்டி ஒன்று பூராவும், இது இனம்–9, பின்னும்,

**வீட்டுமனை எண். 7W உள்ள பூங்கா இடத்துக்குச் செக்குப்பந்தி :-**

மேலே இனம் 1–ல் கண்ட ரோட்டுக்கும் –வடக்கு, வீட்டுமனை எண். 8–க்கும் –கிழக்கு, ரீ.ச.326/8 – பார்ட்–க்கும் –தெற்கு, வீட்டு மனை எண். 7E–க்கும் –மேற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 15 அடிகளும், தென்புறம் 15 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 56–1/2 அடிகளும், மேல்புறம் 57 அடிகளும், இந்தவகை அளவுள்ள 851–1/4 சதுரடிகள் கொண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைநிலம் பூராவும், இது இனம்–10,

ஆக இனம் 1 முதல் 10க்கும் கூடும் 92404 சதுரடிகள் (8584.54 சதுர மீட்டர்கள்) கொண்ட உள்ள ரோடுகள், பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைநிலங்கள் பூராவும், மேற்படி பூங்காவிலுள்ள கோயில், கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி பூராவும், இதற்கு சம்மந்தப்பட்ட சகல ரோடுகளையும் பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பொது பாத்தியங்கள் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்து முன்பு வில்லரசம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்கும், தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்கும் உட்பட்டது.

மேற்படி பூங்கா இடமும், மனையிடங்களும் ந.க.எண். 10373 /2018, சேம–3, நாள். 27.09.2018, ம.வ.(வரன்முறை) /ம.(சே) எண். 895/2018 வரன்முறை மனைப்பிரிவு எண். 760/2018 நெம்பரில் கொள்கை அளவிலான ஒப்புதல் பெற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட பூங்கா, சாலை மற்றும் மூலைமுடுக்கு இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 28.11.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 3707 / 2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலை, பூங்கா, மூலைமுடுக்குகள் ஆகியவற்றை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ2/3480 /2018

**182. <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

6. ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.198, ரீ.சர்வே எண். 11/1 நெ.பு.ஹெ. 0.20.0க்கு த.ரூ. 0.68, ரீ.சர்வே எண். 11/2 நெ.பு.ஹெ. 0.20.0 க்கு த.ரூ. 0.07, ரீ.சர்வே எண். 11/3 நெ.பு.ஹெ. 0.03.5க்கு த.ரூ. 0.09 பின்னும், பழைய க.ச. 195, பு.ஹெ. 3.52.5.க்கு த.ரூ. 9.40, ரீ.சர்வே எண். 11/6 இதில், பு.ஏ. 0.78 1/4 செண்ட் விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமி பூராவும், பின்னும் , மேற்படி கிராமம், பழைய க.ச. 195 ரீ.சர்வே எண். 11/6 நெ.பு.ஹெ. 3.09.0க்கு த.ரூ. 8.56 (இதற்கு பட்டா எண். 495) இதில் பு.ஏ. 0.34 செண்ட் விஸ்தீரமுள்ள புஞ்சை பூமி பூராவும், ஆகக்கூடும் பு.ஏ. 1.12 1/4 செண்ட் விஸ்தீரண பூமியில் ரோடுகள் ஏற்படுத்தி மனை நிலங்களாகப் பிரிவினை செய்து “ஸ்ரீ திருமகள் நகர்” எனப் பெயர் வைத்து உள்ளதில், விற்பனை செய்யப்பட்ட மனைநிலங்கள் போக எஞ்சி உள்ள மனைநிலத்தை வரன்முறைப்படுத்தி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சேலம் மண்டலம் அவர்களின் ந.க.எண். 770/2018 சே.ம.3, நாள். 29.05.2018–ன் படி வழங்கப்பட்ட ஆணையின்படி வரன் முறைப்படுத்தி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ம.(சே). எண். 477/2018, வரன்முறை மனைப்பிரிவு எண். 366/2018–ம் எண்ணாக வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் பெற்றுள்ள மனைப்பிரிவில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரோடு வகையறாக்கள் நீங்கலாக மீதி ஒப்படைக்க வேண்டியதும், இந்த தான சாசனத்துக்குக் கட்டுப் பட்ட பொது உபயோக இடங்களுக்குச் செக்குப்பந்தி.

பூங்கா –1 (மனை எண். 15 A)–க்குச் செக்குப்பந்ததி.

23 அடி அகல கிழமேல் நீள ரோட்டுக்கும், ரீ.ச. 11/6 Part நெ. பூமிக்கும் – தெற்கு, ரீ.ச. 11/6 நெ காலையில் வேறு நபர் பூமிக்கும் – மேற்கும், வடக்கும், வீட்டுமனை எண். 15–க்கும் –கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுரம் 6 1/2 அடிகளும், தென்புரம் 201/4 அடிகளும், தென்வடலாக மேல்புரம் 61 அடிகளும், கிழபுரம் தென்புறத்திலிருந்து வடக்கே தென்வடலாக 35 1/2 அடிகளும், அதிலிருந்து மேற்கே 13 அடிகளும், அதிலிருந்து வடக்கே வடபுற அத்துவரை 21 1/2 அடிகளும், இந்த வகை அளவுள்ள (84.80 சதுர மீட்டர்கள்) 912 1/2 சதுர அடிகள் கொண்ட பூங்கா –1 பொது உபயோக இடம் இது பூராவும். இதுவும் . பின்னும்.

பூங்கா –2 (மனை எண். 17) –க்குச் செக்குப்பந்தி.

23 அடி அகல கிழமேல் நீள ரோட்டுக்கும் – தெற்கு, ரீ.ச.11/3 நெ. பூமிக்கும், வீட்டுமனை எண். 16ஏ–க்கும் – மேற்கு, ரீ.ச. 11/2 Part நெ. காலையில் வேறு நபர் பூமிக்கும் –வடக்கு, வீட்டுமனை எண். 18–க்கும் –கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுரம் 17 அடிகளும், தென்புரம் 18 அடிகளும், தென்வடலாக மேல்புரம் 43'3'' அடிகளும், கிழபுரம் 41 1/2 அடிகளும், இந்தவகை அளவுள்ள ( 68.91 சதுர மீட்டர்கள்) 741 1/2 சதுர அடிகள் கொண்ட பூங்கா –2, பொது உபயோக இடம் இது பூராவும், இதுவும், பின்னும்,

பூங்கா –3 (மனை எண். 23ஏ) க்குச் செக்குப்பந்தி,

25 அடி அகல தென்வடல் நீள ரோட்டுக்கும் –மேற்கு, வீட்டுமனை எண். 22–க்கும் – வடக்கு, ரீ.ச.11/4 நெ. காலையில் வேறு நபர் பூமிக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண். 23–க்கும் –தெற்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுரம் 42' 9'' அடிகளும், தென்புரம் 43' 3'' அடிகளும், தென்வடலாக மேல்புரம் 18'6'' அடிகளும், கிழபுரம் 18 அடிகளும், இந்தவகை அளவுள்ள ( 72.93 சதுர மீட்டர்கள்) 784 ¾ சதுர அடிகள் கொண்ட பூங்கா–3 பொது உபயோக இடம் இது பூராவும். இதுவும் ஆக இதற்கு சம்மந்தப்பட்ட சகல ரோடுகளையும், பூங்கா மற்றும் பொது இடங்களையும் பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பொதுப் பாத்தியங்கள் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்து வில்லரசம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டது. தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.

மேற்படி பூங்கா இடமும், மனையிடங்களும் ந.க.எண். 770 /2018, சேம–3, நாள். 29.05.2018, ம.வ.(வரன்முறை) /ம.சே. எண். 447/2018 வரன்முறை மனைப்பிரிவு எண். 366/2018 நெம்பரில் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பூங்கா இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 20.11.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண்.3597 / 2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ2/3680 /2018

**183. அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 02.11.2018 அன்று நடைபெற்றது. மேற்படி நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரார் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரார் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் | **எம். பிரவீன்** | **60501-** | வி. பழனிசாமி | 59501- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | | | | |

மேற்படி ஏல இனத்திற்கு திரு. எம். பிரவீன் என்பவர் ரூ.60501-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு. எம். பிரவீன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி ஏல இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு. எம். பிரவீன் என்பவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.11.2018 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**184. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக முதல் தளம் கடை எண்.2–ஐ லூம் வேல்டு சார்பாக அலுவலகமாக பயன்படுத்தி வந்தனர். தற்போது மேற்படி கடையினை லூம் வேல்டு அலுவலக மேலாளர் தனது 01.11.2018–ம் தேதிய கடிதத்தில் 30.10.2018 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்.

எனவே ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக முதல் தளம் கடை எண்.2 கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**185. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

9. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 4-க்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 01.11.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் |

| | | | தொகை ரூ. | | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஆர்.கே.வி. ரோடு வணிக வளாக (லூம்வேல்டு) முதல் தளக் கடை எண். 4 | எஸ். ரமேஷ் | 4400- | **பி. சுரேஷ்குமார்** | **4600-** |

ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 4-க்கு திரு. பி. சுரேஷ்குமார் என்பவர் ரூ. 4600-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படி திரு. பி. சுரேஷ்குமார் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு ஆர்.கே.வி. ரோடு வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 4-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரிய திரு. பி. சுரேஷ்குமார் என்பவருக்கு 01.11.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**186. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி புதிய வணிக வளாக கடை எண்கள். **32, 41, 62, 64, 20, 40, 43, 31, 51, 52, 53, 63** மற்றும் சம்பத் நகர் வணிக வளாக கடை எண் **3** (சுய உதவிக்குழு மட்டும்) ஆகியவற்றின் ஏலதாரர்கள் வியாபார சூழ்நிலை காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த இயலாமல் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்படி கடைகளுக்காக செலுத்திய வைப்புத் தொகையினை திருப்பி வழங்குமாறு கோரியுள்ளார்கள். விவரம் பின்வருமாறு

| வ. எ ண. | கடை எண். | ஏலதாரர் பெயர் | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப. எ ண். | தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 32 | ஏ. கற்பகம் | RF-4018 Vol-III | 2012-2013 | 56 | 75600- | 75600- |
| 2. | 41 | ஆர். ராஜகுமார் | RF-4018 Vol-III | 2013-2014 | 80 | 100000- | 100000- |
| 3. | 62 | எம். அன்பழகன் | RF-4018 Vol-III | 2009-2010 | 17 | 100000- | 199040- |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 26 | 51440- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 26 | 47600- | |
| 4. | 64 | பிரேமா சாந்தகுமார் | RF-4018 Vol-III | 2013-2014 | 80 | 77600- | 77600- |
| 5. | 20, 40, 43, 31, 51, 52, 53, 63 | விஷ்ணுவர்தன் | RF-4018 Vol-III | 2013-2014 | 80 | 100000- | 300000- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | RF-4018 Vol-III | 2013-2014 | 80 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2013-2014 | 80 | 100000- | |
| 6. | சம்பத் நகர் கடை எண். 3 | மின்னல் மகளிர் சுய உதவிக் குழு (பர்வதவர்த்தினி) | RF-4018 Vol-III | 2012-2013 | 66 | 100- | 25000- |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 66 | 15000- | |
| | | | | கூடுதல் | | | **777240-** |

மேற்கண்டுள்ளவாறு வழங்கப்பட வேண்டிய வைப்புத் தொகையில் ஏலதாரர்கள் செலுத்தப்பட வேண்டிய சேவை வரித் தொகையை கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | ஏலதாரர் பெயர் | மொத்த தொகை | பிடித்தம் செய்ய வேண்டிய தொகை | திரும்ப வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஏ. கற்பகம் | 75600- | 40000- | 35600- |
| 2. | ஆர். ராஜகுமார் | 100000- | ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்டுள்ளது | 100000- |
| 3. | எம். அன்பழகன் | 199040- | 40000- | 159040- |
| 4. | பிரேமா சாந்தகுமார் | 77600- | 40000- | 37600- |
| 5. | விஷ்ணுவர்தன் | 300000- | ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்டுள்ளது | 300000- |
| 6. | மின்னல் மகளிர் சுய உதவிக் குழு (பர்வதவர்த்தினி) | 25000- | 10000- | 15000- |
| | | 777240- | 130000- | 647240- |

மேற்கண்ட காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள ஏல வைப்புத் தொகை ரூ.7,77,240-ல் சேவை வரித் தொகை ரூ.1,30,000- பிடித்தம் செய்த தொகை போக மீதமுள்ள தொகை ரூ.6,47,240-ஐ வ.எண். 1 முதல் 6 வரை உள்ள ஏலதாரர்களுக்கு அவரவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள ஏல வைப்புத் தொகை ரூ.7,77,240-ல் சேவை வரித் தொகை ரூ.1,30,000- பிடித்தம் செய்த தொகை போக மீதமுள்ள தொகை ரூ.6,47,240-ஐ வ.எண். 1 முதல் 6 வரை உள்ள ஏலதாரர்களுக்கு அவரவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**187.** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோடு மற்றும் காவேரி ரோட்டில் அமைந்துள்ள கீழ்க்கண்டுள்ள கடைகளை அதன் உரிமதாரர்கள் அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மிக அதிகமாக உள்ளதால், வாடகை செலுத்தி தொடர்ந்து கடையினை நடத்த இயலாததால் 31.12.2018 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக கடிதம் கொடுத்துள்ளார்கள்.

| வ. எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CN4 | திரு. எம். ஷாஜகான் |
| 2. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 2 | திரு. என்.ஏ. சண்முகம் |
| 3. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 5 | திருமதி. சி. சாந்தி |
| 4. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 14 | திரு. கே. கிருஷ்ணன் |
| 5. | காவேரி ரோடு வணிக வளாக தரைத் தளக் கடை எண்.1 | திரு. எஸ். சந்திரசேகர் |

மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடைகளை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**188. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆர்.கே.வி. ரோடு மற்றும் காவேரி சாலையில் அமைந்துள்ள கீழ்க்கண்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 14.12.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | காவேரி சாலை வணிக வளாக தரைத்தளக் கடை எண் 1 | **எஸ். குர்சீத் பானு** | **5210-** | கே.எஸ். சையது இப்ராஹிம் | 4350- |
| 2. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CN4 | **ரஜியா பேகம்** | **5550-** | எஸ். ஜபருல்லா | 4975- |
| 3. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 2 | **ஆர். விஜயலட்சுமி** | **1060-** | கே. கற்பகவள்ளி | 970- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 5 | எம். செந்தில்குமார் | 975- | **எல். சின்னுசாமி** | **1080-** |
| 5. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 14 | **கே. சிவகாமி** | **1040-** | எம். திருமூர்த்தி | 980- |

மேற்கண்டவாறு ஆர்.கே.வி. ரோடு மற்றும் காவேரி ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக கடைகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு ஆர்.கே.வி. ரோடு மற்றும் காவேரி ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவர்களுக்கு 01.01.2019 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**189. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 2-க்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 30.11.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆர்.கே.வி. ரோடு வணிக வளாக (லூம்வேல்டு) முதல் தளக் கடை எண். 2 | எஸ். தீனதயாளன் | 4600- | **எஸ். சிவக்குமார்** | **5300-** |

ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 2-க்கு திரு. எஸ். சிவக்குமார் என்பவர் ரூ. 5300-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படி திரு. எஸ். சிவக்குமார் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு ஆர்.கே.வி. ரோடு வணிக வளாக (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 2-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரிய திரு. பி. சுரேஷ்குமார் என்பவருக்கு 01.12.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர்

மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**190. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27, ஈரோடு டவுன், மணிக்கூண்டு, நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான 25x12 அளவுள்ள காலியிடத்தை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தருமாறு திரு. சி. பிரகாஷ், Eeebees Cake Shop என்பவர் கோரியிருந்தார். அதன்பேரில் மேற்படி இடத்திற்கு மாத வாடகை ரூ.5100– என நிர்ணயம் செய்து திரு. சி. பிரகாஷ் Eeebees Cake Shop என்பவருக்கு பொது ஏலத்தை தவிர்த்து ஒதுக்கீடு செய்து வழங்க அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

அரசு தனது 03.12.2018–ம் தேதிய கடித எண். 19259/மா.ந.6/2018–2–ல் அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள். 03.07.2007–ன் பத்தி 4(i)–ன்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் அனைத்தும் முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும் போது பொது ஏலத்தின் மூலமாகவே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே மேற்படி அரசாணையின்படி பொது ஏல அடிப்படையில் மாத வாடகை அல்லது குத்தகைக்கு தகுதியின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27, ஈரோடு டவுன், மணிக்கூண்டு நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 25x12 அளவுள்ள காலியிடத்தை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மேற்படி காலியிடத்தினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/867/2018

**191. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

# 2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ஆம் தேதி (31.12.2018) திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை, உறுதித் தன்மை தொகைகள் ரூ.1,07,200/-ஐ, மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபனை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். A.J Construction விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | RF Vol-V | 2012-2013 | 45 | 6000.00 |
| 2. | RF Vol-V | 2012-2013 | 76 | 2800.00 |
| 3. | RF Vol-V | 2012-2013 | 76 | 10000.00 |
| 4. | RF Vol-V | 2012-2013 | 76 | 5000.00 |
| 5. | RF Vol-VI | 2013-2014 | 82 | 16800.00 |
| 6. | RF Vol-VII | 2013-2014 | 69 | 50000.00 |
| 7. | RF Vol-VII | 2013-2014 | 69 | 16600.00 |
| | | | Total | **107200.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.1,07,200/-யை திருவாளர். A.J Construction அவர்களுக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி வைப்புத் தொகை ரூ.1,07,200/--ஐ திருவாளர். A.J Construction அவர்களுக்கு திருப்பி வழங்க அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். பி3/3421/2017

**192. அனுமதிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கு அரசாணை (எம்.எஸ்) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 26.07.2018–ல் 01.04.2018 முதல் பொதுச் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் ஆணையாளர் அவர்களின் 20.08.2018–ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி விதிப்பில் அரையாண்டிற்கு குறைந்தபட்சம் சொத்துவரித் தொகை ரூ.300– நிர்ணயம் செய்யலாம் என அறிவுரை வழங்கியுள்ளார்.

அதன்படி பொதுச் சொத்துவரி சீராய்வு 01.04.2018 முதல் சொத்துவரி விதிப்பில் ஓர் அரையாண்டிற்கான குறைந்தபட்ச சொத்துவரித் தொகை ரூ.300– நிர்ணயம் செய்வதற்கும்,

மேற்படி அறிவிப்பினை தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ1/3935/2018

**193. அனுமதிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4-க்குட்பட்ட பீளமேடு கிராமம் பாதாளச் சாக்கடை திட்டத்திற்காக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் உள்ள பலன்தரும் தென்னை மரங்கள் மற்றும் பழவகை மரங்களின் மேல் பலன் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை 01.01.2019 முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை மற்றும் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல இனம் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | இம்மாநகராட்சி மண்டலம்-4-க்குட்பட்ட பீளமேடு கிராமம் பாதாளச் சாக்கடை திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் உள்ள பலன்தரும் தென்னை மரங்கள் மற்றும் பழவகை மரங்களின் மேல் பலன் அனுபவித்துக் கொள்ளும் உரிமம் | ரூ.5,000- | ரூ.5,000- | உரிமத் தொகை முழுவதும் |

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 2016-2019-ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் குத்தகை இனத்தினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி குத்தகை இனத்தினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**194. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4-க்குட்பட்ட பீளமேடு கிராமம் பாதாளச் சாக்கடை திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் உள்ள பலன்தரும் தென்னை மரங்கள் மற்றும் பழவகை மரங்களின் மேல் பலன் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 28.12.2018 அன்று நடைபெற்றது. மேற்படி நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் |
|---|---|---|
| 1. | எஸ். சுப்பிரமணி | ரூ.10501- |
| 2. | எஸ். ஜெகதீஸ்வரன் | ரூ.12101- |
| 3. | ஆர். செல்லமுத்து | ரூ.11050- |

மேற்படி ஏல இனத்திற்கு திரு. எஸ். ஜெகதீஸ்வரன் என்பவர் ரூ.12101-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி பீளமேடு கிராமம் பாதாளச் சாக்கடை திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் உள்ள பலன்தரும் தென்னை மரங்கள் மற்றும் பழவகை மரங்களின் மேல் பலன் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு திரு. எஸ். ஜெகதீஸ்வரன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி ஏல இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு. எஸ். ஜெகதீஸ்வரன் என்பவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.01.2019 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**195. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

5. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27, ஈரோடு டவுன், மணிக்கூண்டு நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 25x12 (300 ச.அடி) அளவுள்ள காலியிடத்தை அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 21.12.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | வார்டு எண். 27, ஈரோடு டவுன், மணிக்கூண்டு நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டணக் | **சி. பிரகாஷ்** | **5101-** | எஸ்.என். ராசு | 4850- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 25x12 (300 ச.அடி) அளவுள்ள காலியிடத்தை அனுபவித்துக் கொள்ளும் உரிமம் | | | | |

மேற்படி குறிப்பிட்டுள்ள காலியிடத்திற்கு அரசு மதிப்பீட்டின்படி மாத வாடகை ரூ.5100- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. திரு. சி. பிரகாஷ் என்பவர் ரூ. 5101-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படி திரு. சி. பிரகாஷ் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரிய திரு. சி. பிரகாஷ் என்பவருக்கு 01.01.2019 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/867/2018

**196. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சிக்குட்பட்ட 31.03.2019 உடன் உரிமம் முடிவடையும் கீழ்க்கண்டுள்ள ஓராண்டு கால மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2019-2022-ம் ஆண்டிற்கு, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஏல இனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை மற்றும் நிபந்தனைகளுக்கும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 01.11.2018-ம் தேதிய 168-ம் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட அரசிதழ் மற்றும் தினசரி நாளிதழில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏலதாரர்கள் 2019-2022-ம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஏல வைப்புத் தொகையானது அதிகமாக உள்ளதாகவும், 2016-2019-ம் ஆண்டில் உள்ள ஏல வைப்புத் தொகை மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை தொகையையே பரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளார்கள்.

**<u>2019-2022 மூன்றாண்டுக்கான உரிம இனங்கள்</u>**

| வ. எண். | ஏல இனங்கள் | 2019-2022-ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஏல வைப்புத் தொகை | | 2016-2019-ஆம் ஆண்டின் ஏல வைப்புத் தொகை | |
|---|---|---|---|---|---|
| | | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை |

| 1 | 2 | 3. | 4. | 5. | 6. |
|---|---|---|---|---|---|
| | **தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை** | | | | |
| 1. | சேர்மன் ஆர்.கே.வெங்கடசாமி சாலையில் நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அதன் பின்புறம் ஆர்.கே.வி.சாலையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிக மையக் கட்டிடம் செல்லார், தரைத்தளம் முதல் மூன்றாம் தளம் முடிய மற்றும் இந்த கட்டிடத்தை சுற்றியுள்ள மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ள காலியிடமும் மற்றும் ஆர்.கே.வி.சாலையில் முதல் மாடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் நீங்கலாக.) | 50.00 இலட்சம் | 50.00 இலட்சம் | 10.00 இலட்சம் | 30.00 இலட்சம் |
| 2. | மண்டலம்-2 மாணிக்கம்பாளையம் அருகில் நடைபெறும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 50000- | 50000- |
| 3. | நேதாஜி சாலையில் உள்ள ஹெமிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தை மற்றும் பெரியார் நகரில் உள்ள வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 30000- | 1.00 இலட்சம் |
| | **பேருந்து நிலையம்** | | | | |
| 4. | ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் விளம்பரங்களை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 3.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் |
| 5. | பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 4.00 இலட்சம் | 4.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 3.00 இலட்சம் |
| 6. | பேருந்து நிலைய இரண்டாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.5-க்கும் 6-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.1) | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 1.50 இலட்சம் | 1.50 இலட்சம் |
| 7. | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.12-க்கும் 13-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.3) | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் |
| 8. | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.16-க்கும் 17-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.4) | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் |
| 9. | பேருந்து நிலைய கிழக்குப்புற பிளாட்பாரம் எண்.6-ன் கட்டண கழிப்பிடம் அருகில் ஸ்டோர்கேசிலிருந்து தூண் எண்.3-க்கும் 4-க்கும் இடையில் 4’x4’ அளவில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.5) | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் |
| 10. | பேருந்து நிலைய பூக்கடை எண்.6 | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் குளியல் அறை** | | | | |
| 11. | பேருந்து நிலையத்தில் 2 மற்றும் 3-வது பிளாட்பாரங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 5.00 இலட்சம் | 5.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 5.00 இலட்சம் |
| 12. | பேருந்து நிலையத்திலுள்ள 5,6 மற்றும் 7-வது பிளாட்பாரங்களில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 5.00 இலட்சம் | 5.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 5.00 இலட்சம் |
| 13. | மண்டலம்-I வார்டு எண். 8 சின்னவலசு மாரியம்மன்கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000- | 25,000- | 25,000- | 25,000- |
| 14. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.19 மாணிக்கம்பாளையம் பள்ளிக்கூடம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000- | 25,000- | 25,000- | 25,000- |
| 15. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000- | 25,000- | 25,000- | 25,000- |
| 16. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 கனிராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000- | 25,000- | 25,000- | 25,000- |
| | **வாகன நிறுத்துமிடங்கள்** | | | | |
| 17. | வ.உ.சி.பூங்கா மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000- | 1.00 இலட்சம் | 25,000- | 1.00 இலட்சம் |
| 18. | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 10,000- | 30,000- | 10,000- | 30,000- |
| 19. | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள கார் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 20,000- | 30,000- | 20,000- | 30,000- |
| 20. | காந்திஜி வீதியில் உள்ள மாநகராட்சி டாக்சி ஸ்டேண்டில், கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000- | 50,000- | 30,000- | 50,000- |
| | **வ.உ.சி. பூங்கா** | | | | |
| 21. | வ.உ.சி.பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் |
| 22. | வ.உ.சி. சிறுவர் அறிவியல் பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் | 2.00 இலட்சம் |
| | **பலன் தரும் மரங்கள்** | | | | |
| 23. | மண்டலம்-2 ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட எல்லைக்குட்பட்ட பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவித்தல் (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ. 160/6-159-2. மற்றும் 159/2-156-2) | 3,000- | 3,000- | 3,000- | 3,000- |
| | **மீன் கடை** | | | | |
| 24. | மண்டலம்-1 பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட பவானி மெயின் ரோட்டில் கிழபுறமுள்ள குடிநீர் மேல் தொட்டி அருகில் (6'x12' ஆஸ்பெஸ்ட்டாஸ் கடைகள்-8) மீன் கடை நடத்திக் கொள்ளும் உரிமம் | 50,000- | 50,000- | 10,000- | 25,000- |
| 25. | வார்டு எண். 10 கங்காபுரத்தில் உள்ள | 5,000- | 5,000- | 5,000- | 5,000- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீன்குட்டையில் மீன் பிடித்துக் கொள்ளும் உரிமம் | | | | |

மேற்கண்டுள்ள உரிம இனங்களுக்கு 2019-2022-ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஏல வைப்புத் தொகை (கலம் எண். 3, 4) அதிகமாக உள்ளதாக ஏலதாரர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதால், 2016-2019-ம் ஆண்டில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள (கலம் எண். 5, 6) ஏல வைப்புத் தொகை மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை தொகையையே 23.01.2019 அன்று நடைபெற உள்ள ஏல இனங்களுக்கு நிர்ணயம் செய்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதிக்கலாம். கோப்பு எண். அ1/5131/2018

**197. அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமாக (Open Defecation Free City) அறிவிக்கப்பட்டு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகத்திடம் சான்று பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக ODF+ மற்றும் ODF++ சான்று பெற்றிட கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சியை ஏற்கனவே Open Defecation Free City (ODF) சான்று பெற்றுள்ளதால் தற்சமயம் அடுத்த நிலையான Open Defecation Free Plus City (ODF+) சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்க்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்க்க பள்ளி மாணாக்கர்கள், பொது மக்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவித்திட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள படி 60 வார்டுகளிலும் அனைத்து தரப்பு மக்களிடமும் சுய அறிவிப்பு படிவம் (Self Declaration Forms) பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ஈரோடு மாநகர பொது மக்கள் தங்களது கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அதனை 20.10.2018 மாலை 6 மணிக்குள் தெரிவிக்க ஏதுவாக தினசரி நாளிதழ்களில் 02/10/18–ந்தேதி பிரசுரம் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட கால கெடுவுக்குள் (20/10/18) பொது மக்களிடம் இருந்து எந்த வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை. ஆகவே ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவிக்க அனுமதிக்கலாம்.

கோப்பு எண். எச்1 /420/15

**198. அனுமதிக்கப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமாக (Open Defecation Free City) அறிவிக்கப்பட்டு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகத்திடம் சான்று பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக நகரினை தூய்மையாக பராமரிக்கவும், நகரில் சேகரமாகும் குப்பைகளை அறிவியல் ரீதியாக கையாளவும் மத்திய மாநில அரசுகள் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியை குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவித்து 3 நட்சத்திர தரச் சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள படி தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பள்ளி மாணாக்கர்கள், பொது மக்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கெள்ளப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாநகராட்சியை குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவித்து 3 நட்சத்திர தரச் சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள படி 60 வார்டுகளிலும் அனைத்து தரப்பு மக்களிடமும் சுய அறிவிப்பு படிவம் ( Self Declaration Forms) பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ஈரோடு மாநகர பொது மக்கள் தங்களது கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அதனை 20.10.2018 மாலை 6 மணிக்குள் தெரிவிக்க ஏதுவாக தினசரி நாளிதழ்களில் 02/10/18–ந்தேதி பிரசுரம் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட கால கெடுவுக்குள் (20/10/18) பொதுமக்களிடம் இருந்து எந்த வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை. ஆகவே ஈரோடு மாநகராட்சியை 3 நட்சத்திர தரத்தில் குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

ஈரோடு மாநகராட்சியை 3 நட்சத்திர தரத்தில் குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவிக்க அனுமதிக்கலாம்.

கோப்பு எண். எச்1 /420/15

**199. அனுமதிக்கப்பட்டது.**

**9.** அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் 12.07.2017–ம் தேதிய ஆய்வுக் கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் (சேலம் முகாம்) 22.07.2017–ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி, இம்மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் அமைந்துள்ள கட்டிடங்களில் குறைவாகவும் / விடுபட்ட சொத்துவரி விதிக்கப்பட வேண்டிய கட்டிடங்கள், விடுபட்ட தொழில்வரி இனங்கள், குடிநீர் இணைப்பு கட்டணம் செலுத்தப்படாத கட்டிட இனங்கள் மற்றும் காலிமனை வரி விதிப்பு செய்யப்படாத இனங்கள் ஆகியவற்றை கண்டறிந்து enhancement மற்றும் extension சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு–

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த சொத்துவரி விதிப்புகளின் எண்ணிக்கை | | | | – 130103 எண்ணிக்கை |
| Enhancement | - | 15665 | | |
| Extension | - | 919 | | |
| மொத்தம் | – | 16584 | | – 16584 எண்ணிக்கை |
| | | | மீதம் | – 113519 எண்ணிக்கை |

---

மேற்கண்டுள்ளவாறு மொத்த சொத்துவரிவிதிப்புகளின் எண்ணிக்கை **130103**–ல் enhancement மற்றும் extension எண்ணிக்கை **16584** போக மீதமுள்ள **113519** சொத்துவரி விதிப்புகளுக்கும் enhancement மற்றும் extension சொத்துவரி உயர்வு செய்யப்படவில்லை. எனவே **16584** சொத்துவரி விதிப்பு எண்களுக்கும் உயர்த்தப்பட்ட வரியை குறைவு செய்து பழைய வரியே **(2017–2018** முதல் அரையாண்டு வரி) தொடர்ந்து நீட்டித்து **01.04.2018** முதல் பொது சொத்துவரி சீராய்வு செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–
அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ**1/3935/2018**

**200. அனுமதிக்கப்பட்டது.**

10. மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற அமைச்சகம், புதுதில்லி அலுவலக அறிவிப்பு எண்.K-15016/157/2015-SC-1 நாள். 19.01.2018-ல் பொலிவான நகரங்களுக்கான 4-வது சுற்று தேர்வு பட்டியலில் ஈரோடு நகரம் ஸ்மார்ட் சிட்டி-ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி பகுதியில் நவீன முறையில் ஜவுளி சந்தை அமைப்பதற்கு (Market Modernisation of Textile Hub) அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நவீன முறையில் ஜவுளி சந்தை (Market Modernisation of Textile Hub) பகுதி சார்ந்த வளர்ச்சி (Area Based Development) பகுதியில் அமைக்கப்படவேண்டும். ஏற்கனவே கனி மார்க்கெட் வளாகத்தில் பழையகடைகளுக்கு பதிலாக புதியதாக வணிக வளாகம் கட்டுவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளதால் கனி மார்க்கெட் வளாகத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் தற்போதைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நவீன முறையில் ஜவுளி சந்தை (Market Modernisation of Textile Hub) அமைக்கலாம். மேற்படி நவீன முறையில் ஜவுளி சந்தை (Market Modernisation of Textile Hub) அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தயாரித்து அளிக்க வேண்டும். தற்போது மாநகராட்சியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாலும் போதுமான தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாததாலும், மேற்படி கனி மார்க்கெட் வளாகத்தில் தற்போதைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நவீன முறையில் ஜவுளி சந்தை (Market Modernisation of Textile Hub) அமைப்பதற்கு உரிய வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை தனியார் ஆலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்ய மேல் நடவடிக்கை தொடர அனுமதியும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

01. மன்றம் அனுமதிக்கலாம்.
02. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ1/5814/18)**

**201. அனுமதிக்கப்பட்டது.**

11. மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற அமைச்சகம், புதுதில்லி அலுவலக அறிவிப்பு எண்.K-15016/157/2015-SC-1 நாள். 19.01.2018-ல் பொலிவான நகரங்களுக்கான 4-வது சுற்று தேர்வு பட்டியலில் ஈரோடு நகரம் ஸ்மார்ட் சிட்டி-ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி Smart City திட்டத்தில் பெரும்பள்ளம் ஓடை மேம்பாடு செய்யும் திட்டப் பணி இடம் பெற்றுள்ளதால் ஏற்கனவே உள்ள மேற்படி விரிவான திட்ட அறிக்கையினை தற்போதைய விலை விகித்திற்கு ஏற்ப மறு மதிப்பீடு செய்து விரிவான திட்ட அறிக்கையினை 14.08.2018 அன்று நடைபெற்ற 4-வது மாநில அளவிலான உயர்நிலை திட்ட அனுமதிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அக்குழு கூட்டம் முடிவில் "The Committee suggested to redesign the concept providing stone pitching/gabion wall, fencing, planting trees to provide seating area, walking track and railing, instead of proposed construction of concrete retaining wall along the channel. Finally, the committee suggested the Corporation to revise the DPR and place the same in the next HPPSC" என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவின் பரிந்துரைக்கிணங்க ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பெரும்பள்ளம் ஓடை மேம்பாடு செய்யும் பணிக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தயாரித்து அளிக்க வேண்டியுள்ளது. தற்போது மாநகராட்சியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாலும் போதுமான தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாததாலும், மேற்படி பணிக்கு திருத்திய வடிவமைப்பு செய்ய அதற்குரிய விரிவான திட்ட அறிக்கையினை தனியார் ஆலோசகர் நியமித்து தயார் செய்ய மேல் நடவடிக்கை தொடர அனுமதியும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

01. மன்றம் அனுமதிக்கலாம்.
02. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

(இ1/5838/18)

**202. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்:18 பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்கள்: 416/2B,3,4B&4C பெரியசேமூர் கிராமம் (பட்டா எண்கள்: 1278,1279) 2.63 ஏக்கர் விஸ்தீரணத்தில் உத்தேச வீட்டுமனைப்பிரிவு அமைந்துள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவு உறுப்பினர் செயலர் (பொ) / உதவி இயக்குநர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்: 1162/2017 ஈ.உ.தி.கு-2 நாள்:17.02.2018 ல் தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்க மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடக்குகள், மற்றும் பூங்கா வகையறாக்கள் ஆகியவைகளை ஈரோடு சார்பதிவாளர் அலுவலக தானசாசன பத்திரம் பதிவு எண்: 1828/2018, நாள்: 18.06.2018 ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது இம்மனைப்பிரிவில் உள்ள 50'.00" அடி திட்டச்சாலை மற்றும் மூலை முடுக்கு இடங்களை ஈரோடு சார்பதிவாளர் அலுவலக தானசாசன பத்திரம் பதிவு எண்: 2986/2018 நாள்: 27.09.2018 மற்றும் 3092/2018 நாள்: 08.10.2018 ன் படி இம்மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் மூலைமுடுக்கு வகையறாக்களை இம்மாநகராட்சி வசம் எடுத்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) அனுமதி வழங்கலாம். (இ1/1635/2017)

**203. அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சியுடன் இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்ட பி.பெ.அக்ரஹாரம், சூரியம்பாளையம் பேரூராட்சிகள் மற்றும் திண்டல், வில்லரசம்பட்டி, முத்தம்பாளையம், எல்லப்பாளையம், கங்காபுரம் ஊராட்சிகள் ஆகிய பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்திக் கீழ் செயல்படுத்த ஏற்கனவே தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை TUFIDCO, சென்னை அவர்களால் மதிப்பாய்வு (Appraisal) செய்யப்பட்டது. அந்த ஆய்வின் முடிவில் மேற்படி திட்ட அறிக்கையை தற்போதுள்ள புவி அமைப்பின்படி பிரித்து சர்வே செய்து, அதன்படி வடிவமைப்பு செய்து அதற்கேற்றவாறு திருத்திய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், TUFIDCO, சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/AMRUT/638/AMM நாள்.06.07.2018-ல் தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட மேற்படி இரண்டு பேரூராட்சிகள் மற்றும் ஐந்து ஊராட்சி பகுதிகளின் புவி அமைப்பிற்கு ஏற்றவாறு வடிவமைப்பு செய்து பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ஒரு தனியார் ஆலோசகர் மூலம் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் அதற்காகும் தோரய செலவினம் ரூ.40.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

01. மன்றம் அனுமதிக்கலாம்.
02. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பின்னர் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியிலிருந்து இத்தொகையை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/4031/2018

**204. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**